இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-02-2025

# இளைஞரணியின் மொழிப்போர்க் களம்!

மாண்புமிகு துணை முதலமைச்சர் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் இந்தித் திணிப்புக்கு எதிரான போர்ப் பிரகடனத்தைச் செய்துள்ளார்கள்.

திமுக இளைஞரணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர்கள் கூட்டம்நேற்றையதினம்சென்னையில்நடைபெற்றுள்ளது. இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் மூலம், மொழிப்போர்க் களத்தை உருவாக்கி உள்ளார்கள்.

“முதல் மொழிப் போரை முன்னின்று நடத்திய தந்தை பெரியார், இருமொழிக் கொள்கையைக் காத்த பேரறிஞர் அண்ணா, ‘ஓடி வந்த இந்திப் பெண்ணே, நீ நாடி வந்த கோழையுள்ள நாடு இதல்லவே’ என்று 13 வயதில் தமிழ்க்கொடி ஏந்திய முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், கழகத் தலைவர் தலைமையில், இளைஞர் அணிச் செயலாளர் வழிகாட்டுதலில், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பு முயற்சியை முறியடித்து, மொழியுரிமையை நிலைநாட்டுவோம்” என்று இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மும்மொழிக் கொள்கையைத் திணிக்கப் பார்க்கும், நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டுக்குப் பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் இளைஞர் அணி சார்பில் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலம்தோறும் அவர்கள் இந்தியைத் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். நாமும் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம். ‘திணிப்பது உன் வழக்கம் - எதிர்ப்பது எமது கடமை’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளைச் சொல்லி எழுச்சி ஊட்டி இருக்கிறார் திராவிட நாயகன் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**ஓர் இனத்தை அடிமைப்படுத்த வேண்டுமானால், அந்த இனத்தவர் பேசும் மொழியை முதலில் அழித்துவிடு - என்பது ஆதிக்க வர்க்கத்தின் வழிமுறை ஆகும். அத்தகைய ஆதிக்கச் சிந்தனையின் அடிப்படையில்தான் இந்தி திணிக்கப்படுகிறது. “உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன், இது மொழிப்பிரச்சினை அல்ல. இது ஆதிக்கப் பிரச்சினையே தவிர மொழிப்பிரச்சினை அல்ல” என்று பேரறிஞர் அண்ணா தெளிவாகச் சொன்னார். அந்த ஆதிக்கத்தை ஏற்கமாட்டோம் என்பதன் அடையாளமாக அதனை எதிர்த்து தொடர்ச்சியாகப் போராடி வருகிறோம்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்ட வரலாறு என்பது 1938 ஆம் ஆண்டே தொடங்கிவிட்டது. சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி என இயங்கிய காலம் அது. தமிழறிஞர்களும், இறையியலாளர்களும், அரசியல் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து நடத்திய போராட்டம் அது. 1940 வரையில் இரண்டாண்டு காலம் தொடர்ச்சியாக நடந்தது. ‘தமிழ்நாட்டில் சுத்த தமிழர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுப்பதற்கான போர்’ என்று இதனை தந்தை பெரியார் சொன்னார். ஆரியச் சூழ்ச்சிக்கும் திராவிட வீரத்துக்குமான போர் என்று சொன்னார். இந்தி கட்டாயப் பாடம் என்ற உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.**

மீண்டும் 1948 ஆம் ஆண்டும் இந்தி எதிர்ப்புக் களம் தமிழகத்தில் அமைந்தது. அப்போது திராவிடர் கழகமாகச் செயல்பட்ட காலம். தமிழறிஞர்களும், இறையியலாளர்களும், அரசியல் தலைவர்களும் ஒன்று சேர்ந்து நடத்திய போராட்டம் அது. ‘இந்தப் போராட்டக் களத்தில் முதல் சர்வாதிகாரி’, என அறிவிக்கப்பட்டவர் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் தலைமையில் முதல் மறியல் நடந்தது. 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தி எதிர்ப்புக் களத்தில் முன்னணியில்இருந்தது. 1950 ஆம் ஆண்டுகட்டாயஇந்திகைவிடப்பட்டது.

1950 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திக்குச் சார்பானது. அதன் 17 ஆவது பாகத்தில் 343 முதல் 351 வரையிலான பிரிவுகள் அலுவல் மொழிகள் பற்றிச் சொல்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்குள் - அதாவது 1965 ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் துறைகளிலும் இந்தியை கோலோச்சச் செய்ய வேண்டும் என்கிறது இது.

**1965 ஆம் ஆண்டு இந்தியை ஆட்சி மொழியாக உட்கார வைப்பதற்கான வேலைகள் 1950 ஆம் ஆண்டே தொடங்கிவிட்டதை உணர்ந்த பெரியாரும் அண்ணாவும், தங்கள் இயக்கங்களை இந்தி எதிர்ப்பை நோக்கியதாக வடிவமைத்தார்கள். தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.**

**1963 மொழிப் போர்க்களத்துக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பைப் பெற்றார் முத்தமிழறிஞர் கலைஞர். ஒன்றரை ஆண்டு காலம் நடைபெற்றது அந்தப் போராட்டம். அதுதான் இறுதியில் 1965 மொழிப் போராக வெடித்தது. மாணவர்கள், அப்போர்க்களத்தில் மாவீரர்களாக வலம் வந்தார்கள். அந்தப் போராட்டத்தைத் தூண்டியதாக தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி பாளைச் சிறையில் அடைக்கப்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். இதன் தொடர்ச்சியாக இந்தித் திணிப்பை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்த்தே வந்தார்கள்.**

2012 ஆம் ஆண்டு என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட பாடப்புத்தகத்தில் 1965 மொழிப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துப்படம் இடம்பெற்றிருந்தது. அதனை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அதன்பிறகு அந்தக் கருத்துப்படம் நீக்கப்பட்டது. உள்துறை அமைச்சர் அமித்ஷா இந்திக்கு ஆதரவாகப் பேசி வந்தார். “அவர் தனது கருத்தை திரும்பப் பெறாவிட்டால் 1965 மீண்டும் திரும்பும்” என்று ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களிடம் சொல்லி விட்டு வந்தார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’ என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பின்வாங்கினார். இப்போது புதிய தேசியக் கொள்கை என்ற கொல்லைப் புற வழியாக இந்தி திணிக்கப்படுகிறது. இதற்கு எதிராக போர்க் களத்தை அமைத்து விட்டார், இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

இது இந்தித் திணிப்புப் போராட்டக் களம் மட்டுமல்ல, தமிழினத்தைக் காக்கும் போராட்டக் களம். தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் கொள்கைகளை வென்றெடுக்கும் களம். மாண்புமிகு உதயநிதி அவர்கள் உருவாக்கும் களம், ஆதிக்க வர்க்கத்துக்கு நிரந்தரப் பாடம் புகட்டும் களமாக அமையட்டும்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2025) அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் – அம்பத்தூர் கிழக்கு பகுதி துணை செயலாளர் பா. பொற்செழியன் அவர்களின் மகன் பாபு இளஞ்செழியன் – விஜயலட்சுமி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (21.2.2025) திரைப்படத் துறையினர் நேரில் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது காஞ்சிபுரம் மாவட்டம், பையனூரில் குடியிருப்புகள் கட்ட குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களின் அரசாணைகளை தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பித்து வழங்கியதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் நாசர், துணைத் தலைவர்கள் பூச்சி முருகன், கருணாஸ், செயலாளர் நடிகர் ராஜேஷ், V.தாசரதி, தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் (பெப்ஸி) தலைவர் ஆர்.கே.செல்வமணி, துணைத் தலைவர் அசோக் மேத்தா, தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் மங்கை அரிராஜன், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர் கதிரேசன், துணைச் செயலாளர் சௌந்தர் ஆகியோர் உடன் உள்ளனர்.

## கேரள மாநிலம் – மூணாறு பகுதியில் சாலை விபத்து:

# உயிரிழந்த கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 22 - கேரள மாநிலம், மூணாறு பகுதியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த தனியார் கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நீண்டகரை கிழக்கு கிராமத்திலுள்ள தனியார் கல்லூரியில் பயின்றுவரும் 39 மாணவர்கள் மற்றும் 3 பேராசிரியர்கள் கேரளா மாநிலத்திற்கு பேருந்து ஒன்றில் சுற்றுலா சென்ற நிலையில் கடந்த 19.2.2025 அன்று மூணாறு பகுதியில் பேருந்து எதிர்பாராதவிதமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கல்குளம் வட்டம், திங்கள் நகர் கிராமத்தைச் சேர்ந்த ஆர்.ஆத்திகா (வயது 20), அகஸ்தீஸ்வரம் வட்டம், கனகபுரம், அஞ்சு கிராமத்தைச் சேர்ந்த ஆர்.வேணிகா (வயது 20) ஆகிய இரண்டு மாணவியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்த திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருவரங்கனேரி கிராமத்தைச் சேர்ந்த மாணவன் செ.சுதன் நித்யானந்தன் (வயது 20) என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், காயமடைந்து மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாணவன் செல்வன் கெவின் எட்மர் இட்சோன் சுரேஷ் (வயது 20) என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த மாணவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் 100 1924 - 2023
தி.மு.க.
தகவல் தொழில்நுட்ப அணி
மாநில துணைச் செயலாளர்கள் மற்றும்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
ஆலோசனைக் கூட்டம்
தி.மு.கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் அறிவிப்பு
கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகளின் கூட்டம், வருகிற
24.02.2025 திங்கள் கிழமை மாலை
அன்பகத்தில் நடைபெற உள்ளது.
பொருள்:
1) கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
72 ஆவது பிறந்தநாள் நலத்திட்ட பணிகள்.
2) 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள்
3) பாக(AC3) ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்
4) கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்
DMK IT WING
முனைவர். டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி